

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி. கல்யாணம் தனது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப்பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை குத்தாலம் பி.கல்யாணம் தனது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப்பெற்றார்.



பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த ஒரு சில நாட்களாக மழை பெய்து வருகிறது. மேலும் பச்சைமலையில் பெய்த கனமழையின் காரணமாக பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள விஸ்வக்குடி நீர்த்தேக்கம், லாடபுரம் மயிலூற்று அருவி உள்ளிட்ட பகுதிகளுக்கு நீர் வரத்து அதிகமாக இருந்தது. முன்னாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., வேப்பந்தட்டை ஒன்றியம், அன்னமங்கலம் கிராமத்தில் உள்ள விஸ்வக்குடி நீர்த்தேக்கத்தை பார்வையிட்டார். இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், ஊராட்சி மன்றத் தலைவர் மருதாம்பாள் செல்வக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தஞ்சை மாவட்டம் தொழிலாளர் நலத்துறை சார்பில்

# மானியத்துடன் ஆட்டோ வழங்கும் விழாவில் திரளாகப் பங்கேற்போம்!

## தஞ்சை வடக்கு மாவட்டக் கழகத் தீர்மானம்! சு.கல்யாணசுந்தரம் எம்.பி. சிறப்புரை!

தஞ்சாவூர், டிச. 26 -

தஞ்சை வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் 24.12.2024 மாலை 4.00 மணிக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான செ.இராமலிங்கம் முன்னிலை வகித்தார். மாவட்டக் கழக பொருளாளர் என்.நடராஜன் வரவேற்புரையாற்றினார்.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

இதில் கும்பகோணம் மாநகரச் செயலாளார் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி மற்றும் ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் கலந்எண். கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் மக்கள் நலன் காக்கும் முத்தான திட்டங்களால் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக மிளிர்கிறது. அரசு செயல்படுத்தி வரும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், காலை உணவு திட்டம் மூலம் குழந்தைகளுக்கு காலையிலும் சத்தான உணவு, புதுமைப் பெண் திட்டம், அரசு பள்ளியில் பயின்ற மாணவியர் தடையின்று உயர்கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்தோடு மாதம் 1000 ரூபாய் வழங்கும் ஊக்கத் தொகையின் மூலம் கிராமப்புற குடும்பங்கள் பொருளாதார சுமை அகற்றப்பட்டு மாணவிகள் கல்வி பயின்றதை தொடர்ந்து மாணவர்களுக்கும், தமிழ் புதல்வன் திட்டம் தொடங்கப்பட்டது. முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாடுகள் திட்டம் மூலம் ஊராட்சி ஒன்றிய மற்றும் கிராம ஊராட்சி சாலைகள் மேம்படுத்துதல், வலுப்படுத்துதல், பராமரித்தல் முதலியவை கிராம சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் நோக்கமாகும். இதனால் கிராமங்கள் வளமடைந்து கிராமப்புற மக்கள் பயனடைகிறார்கள். இதுபோல் முதலமைச்சர் ஆழ்ந்த சிந்தனையுடன் அன்னல் அம்பேத்கார் தொழில் முன்னோடிகள் திட்டம், ஆதிதிராவிடர், இளைஞர்கள், மகளிர் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் புரட்சி திட்டங்களாகும். சாலை விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைத்திடும் வகையில் இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48 திட்டம், அதுபோல் நமது ஒன்றியத்திலிருந்து சென்னை போன்ற பெருநகரங்களில் பணிபுரியும் பெண்கள் பாதுகாப்பிற்காக தோழிகள் விடுதி, சமுக நலத்துறையின் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மக்களை தேடி முதல்வர் முகாம் மூலம் பெறப்படும் மனுக்களுக்கு உடனடி தீர்வு போன்ற பல பயனுள்ள திட்டங்களை வழங்கிய நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்வதோடு தொடர்ந்து நல்லாட்சி நடைபெறுவதற்கு பல திட்டங்களை வழங்கிட கேட்டுக்கொள்ளுதல்.

மேலும் தஞ்சை வடக்கு மாவட்டத்தில் 2027-28ல் நடைபெற உள்ள வடநாட்டில் கும்பமேளா போன்று தென்னக கும்பமேளாவான மகாமக பெருவிழாவிற்கு, தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு துறைகள் மூலம் செய்யப்பட வேண்டிய அவசியம் மற்றும் அத்தியாவாசிய பணிகள் குறித்து கோரிக்கைமனு புத்தகமாக தொகுத்து தலைமை செயற்குழு கூட்டத் தில் வழங்கிய மாவட்ட செயலாளர்கள் அவர்களுக்கு பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறது.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்கள் பிரிக்கப்பட்டுள்ளது. அதுபோல் வட்டாரம், வருவாய் ஆய்வாளர், வருவாய் கிராமங்கள் என பிரிக்கப்பட்டுள்ளது. இனாம் கிராமம் ஒழிப்பு செய்யப்பட்டு பல ஆண்டுகளாகியும் அதனை தனி கிராம அலுவலர் செயல்பட்டு வருகிறார்கள். ஒரே ஊராட்சியில் இரண்டு கிராம நிர்வாக அலுவலர்கள் சில ஊராட்சிகளில் இரண்டு ஊராட்சிக்கு ஒரு கிராம நிர்வாக அலுவலர்களும் உள்ளனர். மாவட்டம் பிரிக்கு ம்போது அவரது நிலையில் சரியாக கணக்கிடாமலும் சில கிராமங்கள் அடுத்த மாவட்ட பகுதிகள் உள்ளன. சில வட்டாரங்களில் (வட்டாட்சியர்) மக்கள் குடியிருப்பு இல்லாமல் நிலப்பரப்புகள் மட்டும் உள்ள கிராமத்திற்கு தனி கிராம நிர்வாக அலுவலர் உள்ளனர். குறிப்பாக திருவிடைமருதூர் வட்டாரத்தில் திருவிசநல்லூர் பண்டாரவடை என ஊர் உள்ளது. மக்கள் ஏதுமில்லை. ஆனால் தனி (V.A.O) கிராம நிர்வாக அலுவலர் உள்ளனர். அதே போல் கும்பகோணம் வட்டத்தில் திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், அணியமங்கலம் ஊராட்சியில் 50 குடியிருப்பு பகுதிகள், கும்பகோணம் ஒன்றிய பகுதியாக இருக்கிறது. இதுபோல் பல கிராமங்கள் பேரூர் எல்லையில் இருந்து இடையில் ஒரு கிராமம் தள்ளி மீண்டும் பேரூராட்சி எல்லை வருகிறது. இதுபோல் பல கிராமங்கள் உள்ளன. இதனால் அரசுக்கு வீண் செலவும், அரசு திட்டங்கள் ஒழுங்காக சென்றடைய முடியவில்லை. அதே போல் மாநகராட்சி, நகராட்சி, அரிவிக்கப்பட்டு அவைகளோடு பல ஊராட்சிகள் சேர்க்கபட்ட நிலையில் ஊராட்சிகளுக்கு முடிந்தும், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளுக்கு ஆயுள்காலம் முடிவுராமல் தற்சமயம் உள்ளதால் பல சிக்கல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதனால் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளை களைத்துவிட்டு மேற்கண்ட பிரச்சனை களை முடிந்தவுடன், மேலும் சில பேரூராட்சிகளை நகராட்சியாகவும், சில ஊராட்சிகளை இணைத்து பேரூராட்சியாகவும் அறிவிக்கப்பட உள்ள நிலையில் எல்லா பிரச்சினை களையும் தவிர்க்க மாவட்டம், வட்டம், வருவாய் ஆய்வாளர், வருவாய் கிராமங்கள் என மறு சீரமைப்பு செய்து தேர்தல் நடத்த வேண்டும்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தாலுக்கா, திருநாகேஸ்வரம் பேரூராட்சி பகுதியான அந்தமங்கலம், ஆண்டலாம்பேட்டை ஊராட்சியை தாண்டி 4 கி.மீ தொலைவில் உள்ளது. திருநாகேஸ்வரம் பேரூராட்சியின் ஒரு வார்டு பகுதியான செம்பியமலை தண்டந்தோட்டம் ஊராட்சி, அய்யாவாடி அடுத்து 3 கி.மீ தொலைவில் உள்ளது, சீனிவாசநல்லூர் ஊராட்சியைச் சேர்ந்த பாங்கல் முருக்கங்குடி ஊராட்சியை தாண்டி 5 கி.மீ தொலைவில் உள்ளது.

எனவே ஊராட்சி எல்லைகளை வரையறை செய்யும்போது மேற்கண்டவாறு தொடர்பில்லாமல் உள்ள ஊராட்சி பகுதிகளை கண்டறிந்து அதனை சரிசெய்து மாவட்டம், வட்டம், பேரூராட்சி, ஊராட்சி எல்லைகளை வரை செய்ய வேண்டும்.

பெஞ்சல் புயலில் முன்கள வீரராக நின்று மக்களை காப்பாற்றிய கழக தலைவர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் ஒய்வறியாமல் அனைத்து மாவட்டங்களுக்கும் வெள்ள பாதிப்பு பணிகளை உடனடியாக நேரில் சென்று ஆய்வு செய்து முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் உடனடியாக களத்திற்கு சென்று மக்களுக்கு ஆறுதல் தெரிவித்து அவர்களின் குறைகளை தீர்த்து வைத்தும் ஒன்றிய அரசிடம் பேரிடர் நிதியை உடனடியாக விடுவிக்க கோரி கோரிக்கை வைத்து சிறப்பாக பணியாற்றும் திராவிட மாடல் அரசின் தலைமை பண்பு நிறைந்த முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் பாராட்டுகளை தெரிவித்துகொள்கிறது.

ஜனநாயகத்தையும் நேர்மையானசுதந்திரமான தேர்தலை தகர்க்க நினைக்கும் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தை கைவிடுமாறு நாளடைவில் ஒரே தலைவர் ஒரே கட்சி, ஒரே நாடு என்கிற அதிபர் முறையை பின்பற்ற நேரிடும் பன்முக தன்மை சிதைவு ஏற்படும் என்பதை தெளிவாக எடுத்துரைத்த கழக தலைவர்க்கும் திராவிட முன்னேற்ற கழக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்வது என தீர்மானிக்கிறது.

**வைக்கம் நூற்றாண்டு விழா !**

வைக்கம் நூற்றாண்டு நினைவு விழாவை தந்தை பெரியார் முன்னின்று போராடிய வைக்கத்தில் கேரள மாநில முதலமைச்சர் அவர்களுடன் கொண்டாடி தந்தை பெரியார்க்கு அங்கே புதுப்பிக்கபட்ட நினைவகம் நூலகம் கம்பீரமான சிலை என முப்பெறும் சாதனை சின்னங்களை வைக்கத்தில் நிறுவி சமூக நீதிச் சிந்தனை சுடரை கொண்டு சென்று சிறப்பு செய்தும் மற்றும் குல தொழிலை ஊக்குவிக்கும் விஸ்வகர்மா திட்டத்திற்கு பதில் சாதி பாகுபாடற்ற கலைஞர் கைவினை திட்டத்தை தொடங்கி வைத்துள்ள திராவிட மாடல் அரசுக்கும் நன்றியையும் பாராட்டுகளையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துகொள்ள தீர்மானி க்கப்படுகிறது.

தமிழகத்தில் இந்தியாவே திரும்பி பார்க்கிற வகையில் தமிழக அரசின் திட்டங்களை மற்ற மாநிலங்கள் பின்பற்றுகிற வகையில் சிறப்பாக திராவிட மாடல் ஆட்சி செய்து வரும் கழக தலைவர் தளபதி அவர்களின் கரத்தை வலுப்படுத்த வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் 200 மட்டுமல்ல - 200க்கும் மேற்பட்ட தொகுதியில் வெற்றிபெற இன்றே மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் கழக தோழர்கள் வீடு வீடாக அரசி திட்டங்கள் செயல்பாடுகளை எடுத்துச் சென்று நல்லாட்சி தொடர்ந்திட உறுதி ஏற்போம் என்று இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறது.

உலகின் தலை சிறந்த ஆன்மீக திருவிழாவாகவும் இந்தியாவில் வட நாட்டின் கும்பமேளா போன்று தென்னக கும்பமேளா 12 வருடத்திற்கு ஒரு முறை வரும் மகாமக பெருவிழாவிற்கு தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு துறைகள் மூலம் செய்யப்பட வேண்டி அடிப்படை பணிகள் மற்றும் ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து தயார் செய்துள்ள கோரிக்கைகளை தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் மாண்புமிகு தளபதி அவர்கள் நிறைவேற்றிய பரிந்துரை செய்ய வேண்டி இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், தொழிலாளர் நலத்துறை மூலம் மானியத்துடன் மகளிர்க்கு ஆட்டோ வழங்குதல் மற்றும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும்விழா இன்று (26.12.2024 வியாழக்கிழமை) மாலை 4.00 மணி அளவில் பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் தொழிலாளர் நலன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் அவர்கள் மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் கோ.வி.செழியன் பங்கேற்று சிறப்பிக்க உள்ளதால் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிப்பது என இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட கழகத்தால் ஏற்கனவே மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்களுக்கு வழங்கப்பட்டு இருந்த BLC 100 வாக்காளர்களுக்கு 10 நபர்கள் போடப்பட்ட விபரம் மற்றும் மீதமுள்ள OMR படிவங்களை இதுவரை ஒப்படைக்காதவர்கள் உடனடியாக படிவங்களை பூர்த்தி செய்து ஒப்படைத்தும் ஏற்கனவே ஒப்படைத்த விவரங்களை அதற்கான பட்டியலில் பூர்த்தி செய்து வழங்குவதுடன் மேலும் OMR படிவங்கள் முடிக்கும் பணியினை விரைவாக முடிக்க வேண்டும் என்று இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கூட்ட முடிவில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஜெயலெட்சுமி நடராஜன் நன்றியுரையாற்றினார்.

திராவிட முன்னேற்றக்கழக வளர்ச்சி நிதி ரசீது புத்தகங்கள் தஞ்சை வடக்கு மாவட்டம் முழுவதும் மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளை கழகங்களுக்கு வழங்கப்பட்டு, கழக உறுப்பினர்களிடம் மட்டும் கழக வளர்ச்சி நிதி பெற்று விரைவில் வழங்குவது என்று தீர்மானிக்கப்ப டுகிறது.

தஞ்சை வடக்கு மாவட்டம் முழுவதும் பூத் குழு உறுப்பினர் (BLC) திருவிடைமருதூர், பாபநாசம், கும்பகோணம் ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் ஏற்கனவேநியமிக்கப்பட்டு தலைமை கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர்களும் அந்தந்த பூத்களில் கழக பணிபுரிந்து வருகிறார்கள். இருப்பினும் அவர்களில் சரியாக பணிபுரியாதவர்களும், வெளியூர், வெளிநாடு சென்றவர்கள் மற்றும் இறப்பின் காரணமாக ஏற்பட்டுள்ள காலியாக உள்ள பூத் குழு உறுப்பினர்கள் தகுதியான நபரை இணைத்து புதிய பட்டியல் தயார் செய்து தலைமை கழகத்திற்கு அனுப்புவதற்கு ஏதுவாக 05.01.2025 தேதிக்குள் மாவட்ட கழக அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஈரோடு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் காங்கிரஸ் கமிட்டி தலைவர் E.V.K.S. இளங்கோவன் அவர்களுக்கு அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்ய உத்தரவிட்ட தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் கழக தலைவர் அவர்களுக்கு நன்றியையும் மற்றும் அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்வது என்று இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறது.

முன்னாள் தஞ்சை பாராளுமன்ற உறுப்பினர் S.S.பழனி மாணிக்கம் அவர்களின் தயார் மரகதம் அம்மாள் அவர்களின் மறைவிற்கு தஞ்சை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்வது என்று இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



விராலிமலை மேற்கு ஒன்றிய கழகம் சார்பில் கொடும்பாளூரில் மாவட்ட கழகச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் முன்னிலையிலும், ஒன்றிய கழகச் செயலாளர் இளங்குமரன் தலைமையிலும், கொடும்பாளூர் ஊராட்சி மன்ற தலைவர் அ. ஆனந்தன் வரவேற்புரையிலும் நடைபெற்ற கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில்கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி இளம் சொற்பொழிவாளர்கள் தமிழினியன், மதுமிதா, சிறப்புரையாற்றினர். த.சந்திரசேகர், பழனியப்பன், கே.ஆர்.என் போஸ், சு. சண்முகம், மு.பி.ம.சத்தியசீலன், டி.செல்வம், ஏ.பி.ஆர்.ராஜாங்கம், பாலமுருகன், கே.ஜி.எஸ்.சுகி, எம். ஆர்.அன்பழகன், சிவா, ராஜா, இரா. மூக்கையா, என்.எஸ்.கே.நல்லதம்பி, நா.சி.பழனிச்சாமி, பெ. கண்ணன், இரா.பாலசுப்பிரமணியன், என். வீராச்சாமி, சி.சி. செல்வம், செ.கோபால், தகவல் எழில் ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.



நாகை மாவட்டம் நாகை கோட்டைவாசலில் உள்ளதந்தை தந்தை பெரியார் சிலைக்கு பெரியாரின் 51 ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு நாகை மாவட்ட திமுக செயலாளரும், தமிழக மீன் வளர்ச்சி கழகத்தின் தலைவருமான என். கௌதமன் தலைமையில் மரியாதை செலுத்தினர். உடன் திராவிட கழக மாவட்ட தலைவர் நெப்போலியன், மாவட்ட செயலாளர் புபேஷ் குப்தா, கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி,நாகை நகர மன்ற தலைவரும், நகர திமுக செயலாளருமான இரா. மாரிமுத்து காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் அமிர்தராஜா , விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் அறிவழகன், பகுத்தறிவாளர் கழக தலைவர் சோமு, மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் பிரதீப் மற்றும் பலர் உள்ளனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் தந்தை பெரியார் அவர்களின் 51 வது நினைவு தினத்தை முன்னிட்டு தாராபுரத்தில் உள்ள தந்தை பெரியாரின் திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., பேசினார். உடன் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கே.ஜி.சீனிவாசன், மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, மகா.அலெக்சாண்டர் மற்றும் பலர் உள்ளனர்.